# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE SPECIAL SUB COURT FOR MCOP CASES, MADURAI

MCOP No. 1909/ 2024

DEPOSITION OF WITNESS FOR P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலாஜி | Caste | : |
| Father/Husband Name | : பாஸ்கரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day 07/2026.

நான் மனுவின் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்துள்ளேன். எனது தரப்பு சான்றாவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| S.No. | Documents | Remarks |
|---|---|---|
| Ex.P1 | முதல் தகவல் அறிக்கை | கணினி நகல் |
| Ex.P2 | மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| Ex.P3 | மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை வழங்கிய ரூ.4,21,511/-கான மருத்துவ பில்கள் | அசல் |
| Ex.P4 | ஸ்ரீமணக்குலவிநாயகர் மருத்துவமனையின் வெளிநோயாளி பதிவு புத்தகம் | அசல் |
| Ex.P5 | ஸ்ரீமணக்குலவிநாயகர் மருத்துவமனையின் மருத்துவ குறிப்பு | அசல் |
| Ex.P6 | ஸ்ரீமணக்குலவிநாயகர் மருத்துவமனையின் ரூ.45,379/-கான மருத்துவ பில்கள் | அசல் |
| Ex.P7 | போஸ் மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| Ex.P8 | போஸ் மருத்துவமனை வழங்கிய மருத்துவ குறிப்பு | அசல் |
| Ex.P9 | போஸ் மருத்துவமனை வழங்கிய ரூ.1,48,305/-கான மருத்துவ பில்கள் | அசல் |

| | | |
|---|---|---|
| Ex.P10 | ராணி மருத்துவமனையின் மருத்துவ விடுவிப்பு அறிக்கை | அசல் |
| Ex.P11 | ராணி மருத்துவமனையின் ரூ.44,580/-கான மருத்துவ பில்கள் | அசல் |
| Ex.P12 | எனது மாற்று திறனாளி அடையாள அட்டை | நகல் |
| Ex.P13 | ஆதார் அட்டையின் நகல் | நகல் |
| Ex.P14 | வங்கி கணக்கு புத்தகம் நகல் | நகல் |
| Ex.P15 | எனது பணி அடையாள அட்டை | நகல் |
| Ex.C1 | இயலாமை சான்றிதழ் (88%) | அசல் |

மனுப்படி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன் என்றால் சரிதான். நான் எங்கு வேலை செய்து வந்தேன் என்றால் நாகர்கோவிலில் வேலை செய்து வந்தேன். எனது சொந்த ஊர் விழுப்புரம் ஆகும். விபத்து எங்கு நடந்தது என்றால் விருதுநகர் அருகே நடந்தது. விபத்து சமயத்தில் எங்கு சென்றேன் என்றால் நாகர்கோவில் இருந்து மதுரைக்கு இருசக்கர வாகனத்தில் வந்தபோது விபத்து நடந்தது.

2. நாகர்கோவிலில் எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் காலை 09.00 மணிக்கு புறப்பட்டோம். நான் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தேனா என்றால் அணிந்திருந்தேன். தலைக்கவசம் முறையாக அணியாததால் தலைக்காயம் ஏற்பட்டது என்றால் கிளிப் சரியாக போடவில்லை அதனல் கழண்டுவிட்டது. விபத்து எவ்வாறு நடந்தது என்றால் நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் சாலையின் மையத்தடுப்பு சுவரில் மோதிவிட்டார்.

3. மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வேகமாக போக வேண்டாம் என்று இருசக்கர வாகனம் ஓட்டியவரிடம் கூறினேனா என்றால் கூறினேன். நேரமாகிவிட்டது என்று சொன்னார். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்தினரை

விசாரித்தால் தான் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பணி அடையாள அட்டையான ம.சா.ஆ.15 ஆவணத்தில் நிறுவனத்தின் பதிவு எண், எனது பணியாளர் எண் போன்ற விவரம் எதுவும் இல்லாததால் எனது ஆவணம் ஏற்று கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

4. எனது வருமானம் மற்றும் வருமான இழப்பை காண்பிக்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்போது வேலை எதுவும் செய்ய இயலவில்லை. நான் தற்போது வேலை செய்து வருகிறேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தலைக்கவசம் அணியவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தலைக்கவசம் அணிந்திருந்தால் தலைக்காயத்தை குறைத்திருக்கலாம் என்றால் சரியல்ல. மிகைப்படுத்தி இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

Sd/—பாலாஜி

நீதிமன்றத்தில் மேலே சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.06 18:13:34 +0530

சிறப்பு சார்பு நீதிபதி. மோ.வா.வி வழக்குகள்,
மதுரை